*புதுச்சேரி அரசு*
*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **26 ஜுலை, 2021**

# பத்திரிகை செய்தி

இந்திய நாட்டின் 11-வது குடியரசுத் தலைவர் டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அவர்களின் 6-வது நினைவு நாள் இன்று(27-07-2021) அனுசரிக்கப்படுகிறது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் இலாசுப்பேட்டை, குறிஞ்சி நகரில் உள்ள டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அறிவியல் மையம் மற்றும் கோளரங்க வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரது சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

பத்திரிகையாளர்களிடம் பேசிய துணைநிலை ஆளுநர்,

- முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அவர்களின் 6-ஆம் ஆண்டு நினைவு தினத்தில் முதலமைச்சருடன் இணைந்து வந்து அவருக்கு மரியாதை செலுத்துவதில் பெருமை அடைகிறேன்.
- தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு ராமேஸ்வரத்தில் பிறந்து, விண்வெளியில் நாயகனாகத் திகழ்ந்து, உலக அளவில் இந்தியாவிற்கு புகழ் சேர்த்து, நமது குடியரசு தலைவராகவும் சிறப்பாகச் செயலாற்றிய அவருக்கு நம் புதுச்சேரியில் மரியாதை செலுத்துவதில் பெருமையடைகிறோம்.
- முன்னாள் குடியரசுத் தலைவர் குழந்தைகள் மீது மிகுந்த அன்பு செலுத்தியவர். குழந்தைகள் கல்வி கற்று மேல்நிலை அடைய அவரது ஆசிர்வாதம் என்றும் இருக்கும். அதேபோல இளைஞர்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருந்தவர். அவரது வழியில் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு புதுச்சேரி அரசு துணை நிற்கும்.

என்று கூறினார்.